27 ஜூன் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 13ம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**கலாச்சார எல்லைகளை இணைப்போம்**

# எந்த அளவையால்




# அதே அளவையால்
# உங்களுக்கும் அளக்கப்படும்

கொரிந்து நகர் திரு அவைக்கு புனித பவுல் வழங்கிய செய்தி (2கொரி.8) நமக்கும் பொருந்தும் அனைத்துலகச் செய்தியாகும். தொடக்க கால கிறிஸ்துவர்களின் அடிப்படை வளர்ச்சியை அது குறிக்கிறது. கொரிந்து நகர் திரு அவை வளர்ந்து முதிர்ச்சி அடைந்த போது, ஜெருசலத்திலுள்ள ஏழைகளுக்கு உதவிக்கரம் நல்கிறது. நம்பிக்கையிலும் போதனையிலும் அறிவிலும் மதிப்பிலும் தங்களை மிளிரச் செய்ய ஜெருசலச் சமயப்போதகர்களுக்குக் கைமாறு செய்ய அவர்கள் விரும்பினர். இன்னும் சற்று கூடுதலாக நன்றிப்பெருக்கோடு உதவிகளை வழங்குவதில் உயர்ந்து நில்லுங்கள் என புனித பவுல் அவர்களை வலியுறுத்தினார். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி புனித பவுல் மேலும் கூறியது, 'அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்'

ஏழை-எளியோரின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது திரு அவையின் சமூகப் போதனைகளின் அடிப்படை. நமது தேவைக்கு அதிகமாக இருப்பதைப் பகிர்ந்து கொள்வதில் நாம் ஏழ்மையாகி விடமாட்டோம் என்பது பவுல் அடியாரின் போதனை. 'ஒவ்வொரு மனிதனின் தேவைகளைப் பூர்த்திச் செய்ய இந்த உலகம் போதுமானது, ஆனால் ஒவ்வொரு மனிதனின் பேராசைக்கு அல்ல' என மகாத்மா காந்தி கூறியிருக்கிறார். 'மழை காலத்திற்கு' சேமித்து வைக்க வேண்டும் என்ற கருத்து ஒன்றும் புதிதல்ல. ஆயினும், நமது தேவைகளைக் கடவுள் கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென புனித பவுல் விரும்புகிறார்.

தர்மம் செய்து ஏழைகளுக்கு ஒருவர் செய்யும் கடமை; அது கிறிஸ்துவில் முழுமையாக வாழ்வதன் பொருள். ஏனெனில் அவர் வழியாக அவருக்காக அனைத்தும் படைக்கப்பட்டன. 'அவர் அனைத்தையும் படைத்தார். உலகின் உயிர்கள் யாவும் நலம் பயப்பவை' என சாலமோனின் ஞானத்திலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகம் கூறுகிறது.

சுயநலமின்றி வாழ்ந்த புனித வின்சென் டி பவுல், நாம் பின்பற்றக்கூடிய ஒருவர். நாள்தோறும் சாதாரண பணிகளைச் செய்து கிறிஸ்துவில் அவர் கலந்திருந்தார். காலப்போக்கில் தர்மம் செய்யும் அழைப்புக்கு அவர் இட்டுச் செல்லப்பட்டார். தமது வாழ்வைப் பணயம் வைத்து ஏழைகளுக்கு சேவை செய்தார். குருவாக இருந்தாலும் சரி, துறவறத்தாராக இருந்தாலும் சரி, இருக்கும் இடத்தில் இவ்வாறு செய்ய ஒவ்வொருவரையும் அவர் ஊக்குவித்தார்.

எந்த அளவையால் கொடுப்பீர்களோ அந்த அளவையாக பெறுவீர்கள். பன்னிரெண்டு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண்ணை குணமாக்கி கிறிஸ்து வாழ்வளித்தார். அதே போல் இலவசமாக கொடுங்கள். கொடுப்பதில்தான் நாம் பெறுகிறோம்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

"அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்"

(மாற்கு 5: 36)

**இன்றைய வாசகங்கள்:**

சாஞா. 1, 13-15; 2, 23-24;

திப. 29, 2, 4-6, 11-13;

2கொரி. 8, 7. 9. 13-15;

மாற்கு 5, 21-43 (or 21-24, 35-43).

INTERNAL CIRCULATION ONLY
BUL 26/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org